பல்வேறு கருத்துக்களை ஆர்வமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் சொல்லும் கருத்துக்களை எனக்குத்தெரிவித்திருந்தால், முன்கூட்டியே பதில் சொல்வதற்குத் தயாராக இருந்திருப்பேன். எனவே, தனியாக வினாக்கள் போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் அமைச்சரிடம் வேண்டுகோளை கொடுத்துவிடுங்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலய திருப்பணி.

58—(*வினா எண். 10183) திரு த. புஷ்பராஜ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலயம் திருப்பணி எப்போது முடியும் ?

(ஆ) இத்திருக் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னுங்குருந்துடை அய்யனார் ஆலயத் திருப்பணி முடிக்க ஏறக்குறைய ஓராண்டு (அக்டோபர் 1987) ஆகும்.

(ஆ) ரூ. 75,000 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையால் அரசு மானியமாக வழங்க 29–10–1985இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புதிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையம் அமைத்தல்.

59—(*வினா எண்.994) திரு டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன் : : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் புதிதாக துவங்கிய மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு தனித்து ஒரு மாவட்டத் தொழில் மையம் துவங்கும் உத்தேசம் இல்லை. சென்னை நகரத்தின் தொழில் தேவைகள் சென்னையில் உள்ள மண்டல துணை தொழில் வணிக இயக்குநரால் கவனிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்ததனால் ஏற்பட்ட புதிய மாவட்டங்களான பசும்பொன் முத்துராமலிங்கம், மற்றும் காமராசர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் 21–4–1986இல் அமைக்கப்பட்டு அவை முறையே 7–5–1986, 15–5–1986லிருந்து இரண்டும் செயல்படத்துவங்கியுள்ளன.

அண்ணா மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் 14–7–1986இல் அமைக்கப்பட்டு, அவை முறையே 1–8–1986, 28–7–1986 ஆம் நாட்களிலிருந்து செயல்பட துவங்கியுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்ததனால் ஏற்பட்ட புதிய மாவட்டமான சிதம்பரனார் மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையம் அமைக்க மைய அரசின் அனுமதி கிடைக்கும் வரை, அம்மாவட்டத்தில் ஒரு கிளை மாவட்டத் தொழில் மையம் அமைக்க 19–9–1986இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும், மாவட்ட தொழில் மையம் அமைக்க மத்திய அரசு அனுமதித்து 14–2–1987இல் கடிதம் வரப்பெற்றது.

திரு டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக அங்கே வருகின்ற அப்ளிகேஷன்களையெல்லாம் ஸ்க்ரூட்டினைஸ் செய்து, வங்கிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு கடன் வழங்கும்படி அனுப்பியும் கூட, சில வங்கிகளில், மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்குக் கடன் வழங்குவதில் கடுமையான காலதாமதமும், சில சமயம் அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாத நிலையும் இருக்கிறது. இதைப் பற்றிய புகார் அரசுக்கு வந்திருக்கிறதா, அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன்: தலைவர் அவர்களே, சென்றமாதம் 20 ஆம் தேதி மாவட்டத் தொழில் மையங்களின் மேலாளரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், வங்கிஉயர் அதிகாரிகளையும் அழைத்து, இது சம்பந்தமாகப் பேசினோம். அவர்கள் அத்தனை பேரும் 31–3–1987-க்குள் கொடுத்து முடிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது வரையில் நாம் பொறுத்துப் பார்க்க வேண்டும்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையங்களுக்கு எந்த அடிப்படையில் தொகைகள் வழங்கப்படுகின்றன ? அதை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு ஆனூர் பு.கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்கள், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் ரூ. 4 இலட்சம் என்று அவர்கள் ஒதுக்குகிறார்கள். ஆனாலும்கூட 50 சதவீதம் மாநில அரசும் போட்டு ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சில இடங்களில் ரூ. 8 இலட்சத்திற்கும் மேலாக ஆனாலும்கூட, மாநில அரசே கூடுதலாகும் செலவையும் ஏற்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன் : இதற்காகத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இதைத் துவங்குவதில், பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகத் தொகை கொடுக்க அரசு முன்வருமா ? மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு தாக்கீது போகுமானால், அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு கடன் வழங்குவதற்கு துணையாக, இனி வருங்காலங்களிலாவது மாவட்டத் தொழில் மையங்களிலிருந்து அந்த வேலை தேடி, தொழில் தேடி வருபவர்களுக்கு தாக்கீது போகுமானால், வங்கிகளிலே மறுக்கப்படாத அளவிற்கு இனியாவது தொகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 இலட்சம் என்று சொல்வது மாவட்ட தொழில் மையங்கள் இயங்குவதற்காக மத்திய அரசு வழங்குகின்ற தொகை. ஆனால் கடன் வழங்குவதற்காக ஒரு தனிப்பட்ட முறையிலே குறியீடு அமைக்கவில்லை. அந்தந்த மாவட்டத்தை பொறுத்தவரையில் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதை சென்ற ஆண்டிலிருந்து கணக்கிட்டு ஏறக்குறைய தமிழ்நாடு பூராவும் 18,100 பேர்களுக்கு தரவேண்டுமென்று இறுதியாக முடிவு எடுத்துக் குறியீடு நிர்ணயித்திருக்கிறோம். அந்தக் குறியீடுபடி நடந்து வருகிறது.

[முற்பகல் 11-00]

கோத்தகிரி யூனியன் தங்குமரஹடாவில் சிறு தொழில்கள்.

60—(†வினா— எண். 11868) திரு எம். சிவக்குமார் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி யூனியனை சேர்ந்த தெங்குமரஹடா என்னும் பகுதியில் சிறுதொழில்கள் நிறுவ அரசு ஏதாவது திட்டம் ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?